அப்படி இருக்கும்போது அந்தப் பகுதிக்கு அமைச்சராக இருந்தாலும் சரி, முதலமைச்சராக இருந்தாலும் சரி, அப்படி வருகின்றபோது சட்டமன்ற உறுப்பினர்கள் அல்லது மக்களுடைய பிரதிநிதிகள் இவர்களை அந்த மேடையிலே ஏற்றுவதற்குக்கூட முடியாத சூழ்நிலை ஏற்படுகிறது என்று சொன்னால் இதற்கு தாங்கள் என்ன உத்தரவாதம் கொடுத்திருக்கிறீர்கள்? அது சம்பந்தமாக தங்களுடைய தீர்ப்பு என்னவென்பதை அறிய விரும்புகிறேன்.

(இ) சேலம் மாவட்டத்திலே உறுப்பினர்கள் தாக்கப்பட்டதாகச் சொல்லப்படுவது.

திரு. கூடலூர் இ. வி. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களைப் பாதுகாப்பது என்பது தங்களுடைய தலையாய கடமை. கடந்த 20 ஆம் தேதி சேலம் மாவட்டத்திலே என்னுடைய கழகத்தினுடைய துணைப் பொதுச் செயலாளர், இந்த மாமன்றத்தினுடைய உறுப்பினர், இன்னொரு உறுப்பினர் டாக்டர் கே. பி. இராமலிங்கம் இரண்டு பேர்களும் சேலம் மாவட்டத்திலே சுற்றுப்பயணம் செய்கின்றபோது மகுடம் சாவடி என்ற இடத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் குறுக்கே மறித்து, அடித்து கொலை செய்கின்ற அளவுக்கு முயற்சி செய்திருக்கின்றார்கள். இது பேரவைத் தலைவர் அவர்களுக்குத் தெரியுமா? அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படுமா?

(பதில் இல்லை.)

(ஈ) கன்னியாகுமரி மாவட்ட ஆலயப் பணியாளர்களின் ஊதிய உயர்வு கோரிக்கை.

திரு. வை. பாலச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள எ. சி. கண்ட்ரோலில் இருக்கின்ற இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத

1987 ஏப்ரல் 22] [திரு. வை. பாலச்சந்திரன்]

திருக்கோயில்களிலே பணியாற்றுகின்ற பணியாளர்கள் ஊதிய உயாவு வேண்டும், அவர்களை அரசு ஊழியர்களாக ஆக்க வேண்டும என்று பல்வேறு கோரிக்கைகளை வைத்து கடந்த ஒரு மாத காலமாகப் போராடி வருகின்றார்கள். அதன் காரண மாக நேற்றிலிருந்து அங்கே திருக்கோயில்களில் திருவிளக்குப் பூஜை நடைபெறாமல் அவர்கள் கதவடைப்பு செய்துகொண்டு இருக்கின்றார்கள். இதன் காரணமாக இந்து பக்தர்கள் கொந்தளிப்புக்கு ஆளாகியிருக்கின்றார்கள். அதற்கு ஆதரவாக வேறு திருக்கோயில்களில் உள்ள பணியாளர்களும் கதவடைப்பு நடத்துவதாகவும், அங்கெல்லாம் பூஜை நடத்துவதில்லை என்றும் முடிவிற்கு வந்திருக்கின்றார்கள். இந்த நிலைமை கன்னியா குமரி மாவட்டத்திலே இந்து மக்கள் மத்தியிலே ஒரு கொந் தளிப்பை உருவாக்கியிருக்கிறது. அதன் மீது அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறது என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. பெருமாள் பிள்ளை அவர்களும் இதே பிரச்சினை குறித்து எழுதி அனுமதி கேட்டிருக்கின்றார்கள்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன பிரச்சினையில் துறை பணியாளர்கள் என்றும் ஆலய ஊழியர்கள் என்றும் தனியாக இருக்கின்றார்கள். துறைப் பணியாளர் களைவிட ஆலயப் பணியாளர்களுக்குச் சலுகையில்லை என்றும், தங்களுக்குப் பணம் வேண்டும், அகவிலைப்படி வேண்டும் என்றும் அவர்கள் விடுத்த கோரிக்கையை ஏற்று 1—4—1986 முதல் ரூ. 10 வீதம் அவர்களுக்குக் கொடுக்கச் சொல்லி ஆணை யிட்டு அந்த ஆணையை அமல் செய்ய நேரிலே சம்பந்தப்பட்ட வர்கள் சென்றிருக்கின்றார்கள். பிரச்சினை எதுவாக இருந்தா லும் துறை ஆணையாளர் மற்றும் அரசுப் பிரதிநிதிகளிடம் அவர்கள் பேசவேண்டுமே தவிர இப்படி ஆலயங்களை மூடுவது என்பது உகந்தது அல்ல. ஆலயங்கள் தொடர்ந்து திறக்கப் பட்டு, விளக்கு ஏற்றப்பட்டு, அர்ச்சனை செய்ய இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்.